**நாள்**: 22.09.2025
O.S. No. 76/2024

**வா.சா.1**

**பெயர்: முத்துவேல் த/பெ. பாலகிருஷ்ணன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் திருவாரூரில் கடந்த 12 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன்.என் தகப்பனார் பெயர் பாலகிருஷ்ணன் என்றால் சரிதான். என் தாயார் பெயர் கங்கை அம்மாள் என்றால் சரிதான். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் மூன்று பேர். 1ம் பிரதிவாதி வெற்றிவேல் என் மூத்த சகோதரர் ஆவார் .2 ம் பிரதிவாதி அபிமன்யு 1ம் பிரதிவாதியின் மகன் ஆவார். என்னுடைய தகப்பனார் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். என் தாயார் வீட்டு குடித்தனம் என்றால் சரிதான். வைப்பூர் கிராமத்தில் தற்போது யார் வசித்து வருகிறார் என்றால் 1ம் பிரதிவாதி வெற்றிவேல் வசித்து வருகிறார். நான் அவ்வப்போது சென்று வருவேன். தாவா சொத்தில் என் தகப்பனார் குடியிருந்து வருகிறாரா என்றால் இல்லை. நான் அவ்வப்போது சென்று வருகிறேன். வீடு பூட்டி வைத்துள்ளேன்.

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் திருவாரூரில் சாப்ட்வேர் கம்பெனி வைத்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து விபரம் தெரியுமா என்றால் புல எண் 154/5C சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 45 குழி. தாவா சொத்து என் தகப்பனார் வருமானத்தைக் கொண்டு என் தாயார் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் தகப்பனார் ஆசிரியர் பணி செய்து வந்தார் என்பதாலும் என் தாயார் வீட்டுக்குடித்தனம் என்பதாலும் என் தாயார் பெயரில் என் தகப்பனார் கிரயம் செய்து கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் தாயார் கடந்த 08.09.2021 அன்று உடல் நலம் சரியில்லாமல் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு 15 நாட்கள் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான். 2021 காலகட்டத்தில் என் தாயாருக்கு சர்க்கரை நோய் முற்றியிருந்து ரத்த கொதிப்பு உள்ளிட்ட நோய்கள் காரணமாக சித்தம் தெளிவில்லாமல் இருந்தார் என்றால்

சரியல்ல. என் தாயார் உடல்நிலை சரியில்லாது இருந்து சிந்திக்கும் திறனற்று இருந்த சூழலை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு கடந்த 04.08.2021 அன்று என் தாயாரிடம் இருந்து நான் மோசடியாக தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பெற்று கொண்டு விட்டேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அசலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் சகோதரர் 1ம் பிரதிவாதி தற்போது எங்கு பணி செய்து வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி தற்போது எங்கு பணி செய்து வருகிறார் என்றால் தெரியாது. நான் வழக்குரையில் சொல்லியுள்ள வழக்கு மூல தேதியான 16.08.2024 அன்று 1ம் பிரதிவாதி திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அமுதம் நியாய விலை கடையில் எழுத்தராக பணிபுரிந்து வந்தார் என்றாலும் நான் வழக்குரையில் கூறியுள்ளது போல 1ம் பிரதிவாதி எவ்வித அத்துமீறலும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூல தேதியான 16.08.2024 அன்று எந்த நேரத்தில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். சுமார் 7.30 மணி இருக்கும். வழக்குமூல தேதியான 16.08.2024 அன்று 1, 2 பிரதிவாதிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் அவரவர்க்குரிய பணியிடத்தில் பணி செய்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் பேரில் எனக்கு பாத்தியது இல்லை என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல. இந்த பிரதிவாதிகள் தாவா சொத்தில் எனக்குள்ள உரிமை உள்ளதை மறுத்துள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்றாலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைநிற்க தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.09.21 10:18:10 +0530